# குலுக்கலின்றி சேர்க்கை மேற்கொள்ளும் பள்ளிகளுக்கான வழிமுறைகள்

1. 2021–22 ஆம் கல்வியாண்டில் 25% இடஒதுக்கீட்டின் படி நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களை விட குறைவான எண்ணிக்கையில் விண்ணப்பங்களைப் பெற்றுள்ள பள்ளிகள் சேர்க்கை வழிமுறைகளில் தெரிவித்துள்ளவாறு தகுதியுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் சேர்க்கை வழங்கப்பட வேண்டும்.
2. சேர்க்கை வழங்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களின் விவரங்களும் பள்ளியின் தகவல் பலகையில் தெரியப்படுத்திட வேண்டும்.
3. சேர்க்கை வழங்கப்பட்டுள்ள அனைத்து மாணவர்களின் பெற்றோர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களின் மூலம் தகவல் வாய்மொழியாகவோ, குறுஞ்செய்தி மூலமாகவோ சேர்க்கைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விவரத்தினை தெரியப்படுத்தி உடன் சேர்க்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் 31.07.2017 க்கு முன்னர் 31.07.2018 பிறகு பிறந்துள்ள குழந்தைகள் சேர்க்கைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருப்பின் (4 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள்) உரிய காரணத்தைக் குறிப்பிட்டு அவ்விண்ணப்பத்தை சேர்க்கைக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்கிற விவரத்தை தகவல் பலகையிலும், பெற்றோருக்கும் தகவல் தெரிவித்திட வேண்டும்.

மேற்காண் வழிமுறைகளின்படி **சேர்க்கை செய்யப்பட்ட மாணவர்களின் விவரத்தை பள்ளிக்கு வருகை புரிந்திருந்த ஆய்வு அலுவலர் அன்றை தினமே இணையதள வழியில் பதிவேற்றம் செய்திடும் பொருட்டு தேர்வு செய்யப்பட்ட விவரங்களை** முதன்மைக் கல்வி அலுவலரால் நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அலுவலர்கள் **தேர்வு செய்யப்பட்ட விவரங்களை** பள்ளி முதல்வர் கையொப்பத்துடன் 3 நகல்களில் 19.08.2021 இவ்வலுவலகத்தில் ஒப்படைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# குலுக்கல் முறையில் சேர்க்கை மேற்கொள்ளுவது சார்ந்து பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்.

படி.1 சேர்க்கைக்காக விண்ணப்பிக்கப்பட்டோரின் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரான SC, ST, MBC, BC, வகுப்பைச்சார்ந்தோர்களும், நலிவடைந்த பிரிவினரான ஆண்டு வருமானம் 2 இலட்சம் குறைவாக பெறுவோரும் குழந்தைகள் கட்டாய்க் கல்வி உரிமைச் சட்டத்தின் படி 25% இடஒதுக்கீட்டு சேர்க்கைக்கு தகுதியுடையவர் ஆவர். மேற்காண் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர் எனில் சமர்ப்பிக்கப்பட்ட உரிய அலுவலரால் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழின் அடிப்படையிலும், நலிவடைந்த பிரிவினர் எனில் உரிய அலுவலரால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழ் அடிப்படையிலும் தேர்வு செய்யப்பட வேண்டும்.

படி. 2 சேர்க்கைக் கோரி விண்ணப்பிக்கப்பட்டுள்ள மாணாக்கர்களுள் 31.07.2021 அன்று குறைந்தபட்சம் 3 வயது அதிகபட்சம் 4 வயது வரையுள்ள குழந்தைகளின் பட்டியல் முதலில் தேர்வு செய்யப்பட வேண்டும். (31.07.2017 முதல் 31.07.2018 வரை பிறந்த குழந்தைகள்) மேற்காண் மாணாக்கர் பிறந்த தேதியினை சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிறப்புச் சான்றிதழ் விவரத்தைக் கொண்டு சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.

படி. 3 மேற்காண் வழிமுறைகளின் படி தெரிவு செய்யப்பட்டுள்ள 3 வயது முதல் 4 வயது உள்ள குழந்தைகளின் பட்டியலில் குழந்தைகளின் இருப்பிட முகவரி பள்ளியிலிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிற்குள் அமைந்துள்ள குழந்தைகளின் பெயர்களை தனியே பட்டியலிடப்பட வேண்டும். இவற்றை சமர்ப்பிக்கப்பட்ட இருப்பிட சான்று (அ) இருப்பிட முகவரிக்கு சான்றான பிற ஆவணத்தின் மூலம் சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.

படி. 4 குலுக்கல் முறையில் மாணாக்கர் பெயர் எழுதும் பணி முதற்கொண்டு தெரிவு செய்யப்படும் முடிவு பணி வரை அனைத்து செயல்பாடுகளும் ஒலி ஒளிப்பதிவு ( Video Recording ) செய்யப்படுதல் வேண்டும்.

படி. 5 மேற்காண் படிநிலை 2 மற்றும் 3 ன்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பட்டியலிலுள்ள மாணாக்கர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவில் சிறப்பு பிரிவின் கீழ் சேர்க்கைகள் அளித்தது போக மீதமுள்ள இடங்கள் 25% எண்ணிக்கையை விட அதிகமாக இருப்பின் தகுதி வாய்ந்த அனைத்து மாணவர்களின் பெயர்களையும் எழுதி குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட வேண்டும். குலுக்கல் முறையில் சேர்க்கைக்காக தேர்வு செய்யப்பட்டோர் பெயர் விவரத்தை தனியே பட்டியலிட்டு கண்காணிப்பு அலுவலர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் மற்றும் பள்ளி முதல்வர் கையொப்பமும் பெறப்பட்டு கண்காணிப்பு அலுவலரிடம் இரண்டு நகல்கள் அளிக்கப்பட வேண்டும்.

படி. 5 **குலுக்கல் முறையில் தேர்வு செய்த பின்னர் ஒவ்வொரு பிரிவிற்கும் 5 இடங்கள் காத்திருப்பில் வைக்கப்பட வேண்டும்.** அதாவது நிர்ணயிக்கப்பட்ட இடங்கள் 8 எனில் 5 இடங்கள் காத்திருப்பு பிரிவில் குலுக்கல் முறையில் மாணாக்கர் தெரிவு செய்யப்பட்டு பட்டியலிடப்பட வேண்டும். இவ்வாறு இரண்டு பிரிவுகளுக்கு ஒதுக்கீடு 15 எனில் 10 மாணவர்கள் காத்திருப்பு பிரிவிலும் 3 பிரிவு எனில் 23 இடங்களுக்கு 15 மாணவர்கள் காத்திருப்பு பிரிவிலும் 4 பிரிவு எனில் 30 இடங்களுக்கு 20 மாணவர்கள் காத்திருப்பு பிரிவிலும் 5 பிரிவு எனில் 38 இடங்களுக்கு 25 மாணவர்கள் காத்திருப்பு பிரிவில் அதே குலுக்கல் முறையில் தெரிவு செய்து தனியே பட்டியலிடப்பட்டு காத்திருப்பு பட்டியல் உள்ளோர் என தனியே பிரித்து கண்காணிப்பு அலுவலர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் மற்றும் பள்ளி முதல்வர் கையொப்பமும் பெறப்பட்டு கண்காணிப்பு அலுவலரிடம் இரண்டு நகல்கள் அளிக்கப்பட வேண்டும்.

படி.6 மேற்காண் வழிமுறைகளின் படி சேர்க்கைக்காக குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ள இறுதி மாணாக்கர் பட்டியலிலும், தெரிவு செய்யப்பட்ட காத்திருப்பு பட்டியலிலும் கண்காணிப்பு அலுவலர், குறைந்தபட்சம் இரண்டு பெற்றோர்கள் மற்றும் பள்ளி முதல்வர் கையொப்பமும் பெறப்பட்டு கண்காணிப்பு அலுவலரிடம் இரண்டு நகல்கள் அளிக்கப்பட வேண்டும்.

படி.7 சேர்க்கைக்காக தேர்வு செய்யப்பட்டு கையொப்பமிடப்பட்ட நகலினையும், காத்திருப்பு பட்டியலில் வைக்கப்பட்டுள்ள மாணாக்கர்களின் பெயர் பட்டியலையும் தனித்தனியே பள்ளியின் தகவல் பலகையில் 19.08.2021 அன்று கண்காணிப்பு அலுவலர் முன்னிலையில் ஒட்டப்படுதல் வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.